# மேல்நிலைப் பள்ளிப் பட்டம் பெற என்ன தேவை?

## 18 கட்டாய கிரெடிட்ஸ்

**ஒன்டாரியோ மேல்நிலைப் பள்ளி டிப்ளோமா பெறுவதற்கு, கீழ்க்காணும் கட்டாய கிரெடிட்ஸை மாணவர்கள் பெறவேண்டும்:**

| | |
|---|---|
| **4** | கிரெடிட்ஸ் ஆங்கிலத்தில் (1வகுப்புக்கு1கிரெடிட்)* |
| **3** | கிரெடிட்ஸ் கணிதத்தில் (11 அல்லது 12 ம் வகுப்புக்கு1 கிரெடிட்) |
| **2** | கிரெடிட்ஸ் விஞ்ஞானத்தில் |
| **1** | கிரெடிட் கனேடிய சரித்திரத்தில் |
| **1** | கிரெடிட் கனேடியப் புவியியலில் |
| **1** | கிரெடிட் கலைப் பாடத்தில் |
| **1** | கிரெடிட் சுகாதாரம் மற்றும் உடற்கல்வியில் |
| **1** | கிரெடிட் இரண்டாவது மொழியாக ஃபிரென்சில் |
| **0.5** | கிரெடிட் பணிவாய்ப்புக் கல்வியில் (கெரியர்) |
| **0.5** | கிரெடிட் குடியியல் பாடத்தில் |

**மேலதிகமாக, மாணவர்கள் பூர்த்திசெய்யவேண்டியவை:**

| | |
|---|---|
| ✓ | 12 தெரிவு கிரெடிட்ஸ் † |
| ✓ | 40 மணி நேர சமூக ஈடுபாட்டுப் பணிகள் |
| ✓ | மாகாண கல்வியறிவுத் தேவை |

**அத்தோடு கீழ்க்காணும் ஒவ்வொரு குழுவிலும் ஒரு கிரெடிட் பெறவேண்டும்:**

| | |
|---|---|
| 1 | **குழு 1:**<br>• ஆங்கிலம் அல்லது ஃபிரென்ச் இரண்டாம் மொழியாக**<br>• ஒரு சொந்த மொழி<br>• கிலாசிக்கல் அல்லது ஒரு சர்வதேச மொழி<br>• சமூக அறிவியல் மற்றும் சமூகநேயம்<br>• கனேடிய மற்றும் உலகக் கல்வி<br>• வழிகாட்டல் மற்றும் பணிவாய்ப்புக் கல்வி<br>• கூட்டுறவுக் கல்வி*** |
| 1 | **குழு 2:**<br>• சுகாதாரம் மற்றும் உடற்கல்வி<br>• கலைகள்<br>• வணிகக் கல்வி<br>• இரண்டாவது மொழியாக ஃபிரென்ச்**<br>• கூட்டுறவுக் கல்வி *** |
| 1 | **குழு 3:**<br>• விஞ்ஞானம் (11 அல்லது 12 ம் வகுப்பு)<br>• தொழில்நுட்பக் கல்வி<br>• இரண்டாவது மொழியாக ஃபிரென்ச் **<br>• கம்பியூட்டர் கல்வி<br>• கூட்டுறவுக் கல்வி *** |

* ஆங்கிலம் இரண்டாம் மொழியாக (ESL) அல்லது ஆங்கிலக் கல்வியறிவு வளர்ச்சி (ELD) யில் ஆகக்கூடியது 3 கிரெடிட்கள், ஆங்கிலத்தில் 4 கட்டாய கிரெடிகளுக்காக கணக்கில்கொள்ளப்படலாம், ஆனால் நான்காவது கிரெடிட் 12 ம் வகுப்பு கட்டாய ஆங்கில பாடத்திற்காக பெறப்பட்டிருக்க வேண்டும்.

** குழுக்கள் 1, 2 மற்றும் 3 இல், இரண்டாம் மொழியாக ஃபிரென்சில் ஆகக்கூடியது 2 கிரெடிட்ஸ் கட்டாய கிரெடிட்ஸாக கருதப்படலாம், குழு 1 இலிருந்து ஒன்றும், குழுக்கள் 2 அல்லது 3 இலிருந்து ஒன்றுமாக.

*** கூட்டுறவுக் கல்வியில் ஆகக்கூடியது 2 கிரெடிட்ஸ் கட்டாய கிரெடிட்ஸாக கருதப்படலாம்.

† 12 தெரிவு கிரெடிட்ஸ் அங்கீகரிக்கப்பட்ட இரட்டை கிரெடிட் பாடங்கள் ஊடாக பெறப்பட்ட 4 கிரெடிட்ஸ் வரை உள்ளடக்கலாம்.

ISBN 978-1-4606-1359-7 (PDF) (Tamil) © ஒன்டாரியோவுக்கான குவீன்ஸ் பிரின்டர், 2013